


# வெளிச்சம் தேடி

கோபினி கருணாகர் | கலை: அடானு ராய்



வாங்க! பச்சை புக்ஸ் படிக்க வாங்க!



அற்புத இந்தியா!

4

என்னுடன் சேர்ந்து
நமது அற்புத
இந்தியாவை
பார்க்க வரீங்களா?
உங்களுக்காக, இதோ!
52 விறுவிறுப்பான
கதை புக்ஸ்!

படத்தை பார்த்து
குழந்தைகளை
உற்சாகமுடன் கதை
சொல்ல தூண்டும்
வார்த்தைகளற்ற
புத்தகம் இதோ!

ஆசிரியர்களுக்கான
workshop பெற
அணுகவும்
+ 91 8800170200






# வெளிச்சம் தேடி


கோபினி கருணாகர்

கலை: அடானு ராய்

மொழியாக்கம்: கீதா தர்மராஜன்



KATHA

டெல்லி | சென்னை | பெங்களூர்




தூக்கணாங் குருவி ஒன்னு
வெளிச்சம் தானே தேடுச்சு!

வெளிச்சமான வீடு தேடி
அங்க இங்க அலஞ்சிச்சு!

தேவுடா… ன்னு உதவி தேடி
மேகம் தாண்டி பறந்துச்சு!

எனக்கு வேணும்
நியாயமுன்னு
கூட்டத்தையே கூட்டுச்சு!



“பொண்ணுங்க தான்
விளக்கு ஒன்னு
வச்சிருக்காங்க,
அதனால
அவங்களுக்கு
வெளிச்சம்
கிடைக்குது!”



“காட்டு
பாம்பு மாணிக்கம்
தான் வச்சிருக்காங்க,
அதனால அவங்களுக்கு
வழியும் தெரியுது!”


“ஆந்தைக்குத்தான் ஜொலி ஜொலிக்கும் கண்ணிருக்குது, அதனால இருட்டுலயும் பாக்க முடியுது!”



தங்க குருவி
குஞ்சுங்கதான்

இருட்ட பாத்து
பயந்துச்சு!

ஐயோ பாவம்! பதட்டத்துல
தேவுடா கிட்ட வேண்டுச்சு!



தேவுடாவும்
நெனச்சிச்சு,
நெனச்சிக்கிட்டே
இருந்துச்சு!
ஆனா என்ன
சொல்லணுன்னு
தலைய தான்
சொறிஞ்சிச்சு!



படபடன்னு குருவிங்க எல்லாம்
கூட்டம் ஒன்னு கூடுச்சு,

பறவை இனம் பேசி பேசி
கலந்துரை ஆடுச்சு!



டபக்குனு...
யோசன ஒன்னு
வந்துச்சு, ஒற்றுமை
வழி கிட்டிச்சு!

அக்ஷன்! என்று
கூவுச்சு!

பிரெண்ஸ்ச தேடி
பறந்துச்சு!



மின்மினிங்க வெளிச்சம் தர
நிலாதூசி கேட்டாங்க,

நிலா தானே எங்களுக்கு
மின்மினிய கொடுத்தாங்க!

தேவுடா கைக்கொட்டி சிரி-
சிரின்னு சிரிச்சிச்சு,

சபாஷ்! குட்டி பிரெண்ஸ்ங்களே!
என்று உரக்க சொல்லிச்சு!



மின்மினிங்க இருக்கும்
இடத்த  தேடி தேடி ஓடிச்சு!

தங்க குஞ்சு வீட்டுக்குள்ளே
வெளிச்சம் கொஞ்சம்
கேட்டுச்சு!

நிலா தூசி தேடி தேடி, குட்டி
குருவி ஓடிச்சு!


மேக கூட்டம் நடுவினிலே,
நிலா கண்ணுல பட்டுச்சு!



நிலா! நிலா வெளிச்சம் வேணும்
ப்ளீஸ் என்று கேட்டுச்சு!



மின்மினியும் தங்க குஞ்சும்
ஹாப்பியா தூங்கி எழுந்துச்சு!



கூடி-கூடி ஒளிர்ந்ததாலே, சிக்கல் தானே தீர்ந்துச்சு!!
எல்லாம்  நல்லா முடிஞ்சிச்சு!!

# உதவி செய்யும் பூச்சிகள்

மின்மினிப் பூச்சிகளப் போலவே, இந்த உலகத்துல விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் உதவி செய்யுற வேற பூச்சிங்களும் இருக்கு! கீழ குடுத்திருக்குற பூச்சிகள அவங்க செய்யுற உதவிகளோட உங்களால பொறுத்த முடியுமா?

1. ரொம்ப ரொம்ப இனிப்பான ஒன்ன உருவாக்கும். அத நினச்சாலே கரடிக்கும் மனுஷனுக்கும் நாக்குல எச்சி ஊறும். அது என்ன?
2. ரொம்ப அழகான பூச்சிங்கள்ள இதுவும் ஒன்னு. அது உடம்புல இருக்குற புள்ளியோட அழக பாத்து எல்லாருமே புகழ்ந்து பேசுவாங்க. அது எது?
3. அது ஒரு சுத்தப்படுத்துறப் பூச்சி, விலங்குங்க வெளியேத்துற சாணத்த சின்னச் சின்ன உருண்டயா உருட்டுற சக்தி அதுக்கு இருக்கு. அது என்ன ?
4. செடிங்கள அழிக்கிற சின்னச்சின்ன பூச்சிங்கள அது சாப்புடும். அது தோட்டத்துல இருந்தா ரொம்பவே உதவியா இருக்கும். அதுமட்டுமில்லாம அதுங்க வலைங்கக் கிட்ட நம்ம ரொம்ப கவனமா இருக்கணும். அது என்ன?
5. அது ஒரு நொடிக்கு 300 தடவ தன்னோட இறக்கைங்கள மூடி விரிக்கும். அதுக்கு 2 ஜோடி இறக்கை இருக்கு. அது பொதுவா சதுப்பு நிலத்துல தான் இருக்கும். அது என்னென்னு கண்டுபிடிங்க?

**சிலந்தி**

**தேனீ**

**தட்டான்**

**சாணம் வண்டு**

**கரும்புள்ளி வண்டு**

Answers on last page



## பாயா தங்க குருவியின் மர்மங்கள்:

1. சிறந்த நெசவாளர்கள்! அடுத்த முறை நீங்கள் படைப்பாற்றலை நினைக்கும் போது, தங்கக் குருவியை நினைவில் வையுங்கள்! அவங்க அவ்வளவு கிரியேட்டிவ்!
2. புத்திசாலி மேஸ்த்ரிகள்: கூட்டின் நுழைவாயில் கீழ்நோக்கி இருக்கும் நீண்ட சுரங்கப்பாதை! ஏண்ணு தெரியுமா?, குஞ்சுகளே பாம்புகள், வேட்டையாடும் பறவைகள் கிட்டே இருந்து பாதுகாக்க!
3. ஒத்துழைப்பு வீரர்கள் பாயா தங்க குறுவிக கூட்டாக நெருக்கமாக கூடுகளை கட்டுவாங்க. இது வேட்டையாடும் மிருகங்களிருந்து பாதுகாக்க.
4. வேஸ்ட் செய்யா பூமி காப்பாளர்கள் குஞ்சுக கூட்டை விட்டு போனபின், பழைய கூடுகள், மற்ற சிறிய பறவைகளுக்கு தங்குமிடங்களாக மாறும்.

**கோபினி கருணாகர்** ஒரு கவிஞர் மற்றும் புனைகதையாளர். அவர் குறிப்பாக வாய்வழி கதைசொல்லல் பாணியை விரும்பி போற்றுவார். அவரது பார்வையற்ற பாட்டியின் மரபு தன் எழுத்துக்களில் உயிர் பெறுகிறது என்பார்.

**அடானு ராய்** 100 க்கும் மேற்பட்ட குழந்தைகள் புத்தகங்களை விளக்கப்படுத்தியுள்ளார். குழந்தை புத்தங்கங்களுக்கான விருது மற்றும் இல்லஸ்ட்ரேஷனுக்கான IBBY சான்றிதழ் போன்ற விருதுகளை வென்றதில் ஆச்சரியமில்லை.

**கீதா தர்மராஜன்** குழந்தைகளுக்கான கதைகள் மற்றும் கற்பனைகளை எழுதுவதை விரும்புகிறார்.இலக்கியம் மற்றும் கல்வித் துறைகளில் அவர் ஆற்றிய சிறப்புமிக்க சேவைக்காக, 2012 ஆம் ஆண்டு அவருக்கு பத்ம விருதும் வழங்கப்பட்டுள்ளது.

## இந்த கதை பற்றி

பொன் சிட்டுக்குருவிகளின் கூடுகள் இருட்டாக இருக்கு. அவர்கள் உதவி கேட்க கடவுளின் ராஜ்யத்திற்கு பறக்கிறார்கள். ஒரு தீர்வு கண்டுபிடிக்க ஒன்று சேர்ந்து மாயாஜால உருவங்கள், கற்பனையின் பாய்ச்சல்கள், நிழல்கள், நிலவுகள் அனைத்தையும் காண்கிறார்கள். மாயமும் கற்பனையும் நிறைந்த இந்த நட்புக்கதை இளம் வாசகர்களை கண்டிப்பாக மகிழ்விக்கும்.

## ஆசிரியருக்கு

ILR புத்தகத்திற்கு உங்களை வரவேற்கிறோம். ஒவ்வொரு தொடரிலும் 13 புத்தகங்கள் என மொத்தம் 8 தொடர்கள் இருக்கின்றன. இவை 0 வார்த்தைகள் கொண்ட கதைகளில் இருந்து 3000 வார்த்தைகளை கொண்ட கதைகளை படிக்க நிச்சயம் உற்சாக படுத்தும்! குழந்தைங்க பாஷையில எழுதிய இந்த கதைங்க, உறுதியாக அவங்க எண்ணும் எழுத்தும் அதிகரிக்கும்!


எடிட்டர் & ஆர்ட் டைரக்டர்: **கீதா தர்மராஜன்** | ஆசிரியர் குழு: **வசந்தி, அஷ்வினி, ராகினி, கௌசல்யா** | டிசைனர்: **விக்ரம் குமார்** | டீடிபி: **உதயகுமார்**

KATHA

இந்த பதிப்பு முதலில் 2021 இல் வெளியிடப்பட்டது


பதிப்புரிமை © கதா, 2012, 2021
பிரதியின் காப்புரிமை © கதா
சித்திரங்களுக்கான காப்புரிமை © கதா
இப்புத்தகத்தின் அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை, வெளியீட்டாளரின் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி புத்தகத்தின் எந்தப் பகுதியையும் மீண்டும் உருவாக்கவோ அல்லது வேறு எந்த வடிவத்திலும் பயன்படுத்தவோ முடியாது.


புது தில்லியில் அச்சிடப்பட்டது.
ISBN 978-81-97937-08-8

KATHA ஒரு பதிவு செய்யப்பட்ட இலாப நோக்கற்ற அமைப்பாகும். இந்த புத்தகம் 300 மில்லியன் குடிமக்களின் சவாலின் படைப்பானதாகும். பள்ளிக்குச் செல்லும் 300 மில்லியன் இந்தியக் குழந்தைகளுக்கு புதிய கற்றல் முறைகள் மூலம் அவர்களின் வகுப்புக்குறிய வாசிப்பை அடைய நாங்கள் உதவுகிறோம்.

டெல்லி: A3, சர்வோதயா என்கிளேவ், ஸ்ரீ அரபிந்தோ மார்க், புது டெல்லி 110 017

சென்னை: 6, பாபநாசம் சிவன் சாலை, மயிலாப்பூர், சென்னை 600 004


தொலைபேசி: டெல்லி: +91 11 4182999 | சென்னை: +91 98400 30073

மின்னஞ்சல்:marketing@katha.org

இணையதளங்கள்: www.katha.org | www.books.katha.org | www.learn.katha.org


இந்தப் புத்தகத்தின் விற்பனை வருமானத்தில் பத்து சதவிகிதம் கதா பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளின் தரமான கல்விக்குப் பயன்படுத்தப்படும்.

பதில்கள்: 1. தேனீ 2. கரும்புள்ளி வண்டு 3. சாணம் வண்டு 4. சிலந்தி 5. தட்டான்



## KATHA

கதா பதிவு செய்யப்பட்ட, இலாப நோக்கமற்ற ஒரு அமைப்பு. பத்மஸ்ரீ கீதா தர்மராஜன் அவர்களால் 1988 இல் துவங்கப்பட்டது. "இலக்கியத்திலிருந்து எழுத்தறிவு" என்ற கல்வி முறையை சாத்தியமாக்குவதே கதாவின் நோக்கம். அர்த்தமுள்ள, தரமான புத்தகங்கள் மூலம் குழந்தைகளை தரநிலை வாசிப்புக்கு(Grade Level) படிக்க எளிய முறையில் உதவி புரிகின்றோம்.

குழந்தைகளுக்கு வாசிப்பினால் ஏற்படும் மகிழ்ச்சியை அதிகரிக்க மிகுந்த அர்ப்பணிப்போடு ஒவ்வொரு வருடமும் 2,00,000 திற்கும் மேற்பட்ட வறுமையில் உள்ள குழந்தைகளுடன் நாங்கள் வேலை செய்துவருகிறோம்.

"[கதா] ... இந்தியாவின் கிரீடத்தில் ஒரு கல்வி நகை."
**– நயோயுகி ஷினோஹரா, துணை நிர்வாக இயக்குனர், சர்வதேச நாணய நிதியம்**

"குழந்தைகளுக்கு கதாவின் புத்தகங்கள் மிகவும் பிடிக்கும். அதனால்தான் ... குழந்தைகளுக்காக இதுபோன்ற அழகான படப் புத்தகங்களை உருவாக்குகிறார்கள்."
**- டைம் அவுட்**

"குழந்தைகள் நிலையான மற்றும் உண்மையான மாற்றத்தையும் இந்த சமூகத்தில் கொண்டுவர முடியும், அவர்களுடைய புத்தகத்தில் காண்பதைப்போல. இந்த எண்ணம்தான் கதாவின் பணிகளை சிறப்பாக இயக்குகிறது."
**- பேப்பர் டைகர்ஸ்**







எனக்கு படிக்க பிடிக்கும்


அற்புத இந்தியா | பச்சை தொடர் | என் இந்தியா!




































Read 108 inspiring stories FREE at learn.katha.org

FOR OUR BOOKS

www.books.katha.org

குழந்தைகளுக்கானது

இந்த கதா புத்தகம்

ISBN 978-81-97937-08-8

www.books.katha.org

₹ 185/-

கதா புக்ஸ்: கலியும் கருத்தும்

கதாவின் 300M திங்க்புக்